1972 ஆகஸ்ட் 22]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர்கள் வாங்குகிற ஓய்வு ஊதியத்தில் 50 சத விகிதம் கிராக்கிப்படி கொடுக்க வேண்டுமென்று இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. ரூ. 40-க்குள்ளாக வாங்குபவர்களுக்கு அந்த ரூ. 5-ம் கிடையாது என்று நிர்ணயிக்கப்பட்டு ரூ. 40-லிருந்து ரூ. 200 வரை வாங்குபவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். ரூ. 40-க்கு உட்பட்டவர்களுக்குக் கொடுப்பதில்லை. ஆகவே ஏழை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு ரூ. 40-க்குள்ளாக வாங்குபவர்களுக்கும் ரூ. 5 கிராக்கிப்படி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கிராக்கிப்படி ரூ. 10 உயர்த்தியபோது 50 சதவிகிதம் என்றால் ரூ. 5 வழங்கப்படுகிறது. ரூ. 40-க்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறதா இல்லையா என்பது பற்றிக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கு விடை அளிக்கப்படும்.

Marriage Loan Applications from Teachers

* 176 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of marriage loan applications received from teachers in Government Secondary Schools (District Board High Schools) in Thanjavur district and lying undisposed of at the Office of the Director of School Education, Madras; and

(b) the reasons for delay, if any, in their disposal?

ஆசிரியர்களின் திருமணக் கடன் விண்ணப்பங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிகளைச் (மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்) சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து வரப்பெற்று, சென்னையிலுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவு செய்யப் படாமலுள்ள திருமணக் கடன் விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) இவற்றை முடிவு செய்வதில் காலதாமத மேற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1971-72-ல் 8.

(இ) காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை.

Television in Educational Institutions in Madras City.

* 177. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce television in educational institutions in Madras City; and

(*b*) if so, the details thereof?

சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களில் டெலிவிஷன் (Television)

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களில் டெலிவிஷன் (Television) நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சென்னையில் டெலிவிஷன் நிறுவப்பட்டபின் இது பரிசீலிக்கப்படும்.

Salem Municipal Council

* 178. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a number of Councillors of the Salem Municipal Council were removed from the Council with police aid about the 25th February 1972; and

(*b*) if so, the details thereof?